செ.வெ.எண்:53 நாள்:27.03.2021

**பெரம்பலூர் மாவட்டம்**

**குன்னம் சட்டமன்ற தொகுதிக்கு வேப்பூர் மகளிர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கடபிரியா, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் குன்னம் சட்டமன்ற தொகுதி பொதுபார்வையாளர் திரு. எஸ்.தேஜஸ்வி நாயக், இ.ஆ.ப. அவர்கள், காவல் துறை பார்வையாளர் திரு.ராஜிவ் ஷ்வரூப், இ.கா.ப. ஆகியோர் ஆய்வு மேற்கொண்டார்கள்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு, குன்னம் சட்டமன்ற தொகுதிக்கு வேப்பூர் மகளிர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கடபிரியா, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் குன்னம் சட்டமன்ற தொகுதி பொதுபார்வையாளர் திரு. எஸ்.தேஜஸ்வி நாயக், இ.ஆ.ப. அவர்கள், காவல் துறை பார்வையாளர் திரு.ராஜிவ் ஷ்வரூப், இ.கா.ப. ஆகியோர் இன்று (27.03.2021) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

**ஆய்விற்கு பின், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்:**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி எதிர்வரும் 06.04.2021 அன்று வாக்குப்பதிவு நடைபெறுவதையொட்டி, குன்னம் சட்டமன்ற தொகுதிக்கு வேப்பூர் மகளிர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வாக்கு எண்ணும் மையம் அமைக்கப்பட்டுள்ளது.

குன்னம் சட்டமன்ற தொகுதியில் 388 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டு, 148.குன்னம் சட்டமன்ற தொகுதியில் 177 இடங்களில் 388 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டு 1,35,097 ஆண் வாக்காளர்களும், 1,38,351 பெண் வாக்காளர்கள், 13 இதரர் என மொத்தம் 2,73,461 வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். குன்னம் சட்டமன்ற தொகுதியில் 388 வாக்குச்சாவடி மையங்களுக்கு 20% (Reserve) உடன் சேர்த்து 465 கட்டுப்பாட்டு கருவிகள், 930 வாக்குப்பதிவு இயந்திரங்களும் (1 வாக்குச்சாவடிக்கு 2 வாக்குப்பதிவு இயந்திரங்கள்) பயன்படுத்தப்படவுள்ளன. 06.04.2021 அன்று மாலை 7.00 மணிக்கு வாக்குப்பதிவு முடிந்தவுடன் வாக்குப்பதிவு மையங்களிலிருந்து, காவல் துறையின் முழு பாதுகாப்புடன் அரசு கூறிய வழிகாட்டு முறைப்படி வாக்கு எண்ணும் மையத்திற்கு கொண்டு வரப்படும் வாக்குப்பதிவு இயந்திரங்களை வரவேற்பு அறையில் முழு தகவல்களும் சரிபார்க்கப்பட்டு, வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட உள்ளன.

வாக்கு எண்ணும் மையத்தில் ஏற்படுத்தவேண்டிய இயந்திரங்கள் பாதுகாப்பு அறை, வாக்கு எண்ணிக்கை மையம், அரசியல் கட்சி முகவர்கள் வாக்கு எண்ணிக்கை பார்வையிட ஏதுவாக அமைக்கப்பட உள்ள தடுப்பு வேலிகள், வாக்கு எண்ணிக்கை மையத்தினை சிசிடிவி கேமரா வைத்து 24 மணி நேரமும் கண்காணித்திட மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள், வாக்கு எண்ணும் மையத்தினை சுற்றி கண்காணிப்பு கோபுரம் அமைத்தும், 3 அடுக்கு பாதுகாப்பு அரண் ஏற்படுத்தியும் பாதுகாப்பது குறித்தும், அஞ்சல் வாக்குகள் எண்ணுவதற்காக அமைக்கப்படும் தனி அறைகள், அரசியல் கட்சி முகவர்கள் அமர்வதற்கான இடம், வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் வைப்பதற்கான தனி பாதுகாப்பு அறைகள், ஊடகப் பிரிவினர் பார்வையிடுவதற்கான வசதிகள் போன்றவை ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

வாக்கு எண்ணும் பணியில் ஈடுபட உள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள், வேட்பாளர்கள் ஆகியோர்களுக்கு தேவையான அடிப்படை வசதியான தண்ணீர் வசதி, மின் வசதி, கழிப்பிட வசதி போன்றவை ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பணிகளை விரைந்து முடித்து வாக்கு எண்ணும் மையத்தினை தயார் நிலையில் வைத்திட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப. ஸ்ரீவெங்கடபிரியா, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி நிஷா பார்த்திபன் இ.கா.ப., உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.பாரதிதாசன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், பெரம்பலூர்.**